செ.வெ.எண் : 06/ செப்டம்பர் நாள் : 04.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக, "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் துவங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு "புதிய இந்தியா சிந்தனை" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.09.2017) ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக, "வெள்ளையனே வெளியேறு" இயக்கம் துவங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் "புதிய இந்தியா சிந்தனை" குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகயில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

இந்திய தேசத்தின் சுதந்திர போராட்டத்தில் நமது முன்னோர்கள் 1942-ஆம் ஆண்டு துவக்கிய வெள்ளையனே வெளியேறு என்ற மாபெரும் இயக்கத்தின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தற்போது வெள்ளையனே வெளியேறு இயக்கம் துவங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசின் மூலம் புதிய இந்தியா சிந்தனை (2017-2022) என்பதனை அடிப்படையாக கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய இந்தியா சிந்தனை என்பதைப் பொறுத்தவரையில் நமது தேசம் வேளாண்மை, கல்வி, மருத்துவம், அறிவியல் என அனைத்து துறைகளிலும் தன்னிறைவு பெற்று பிற தேசங்களுக்கு முன்னோடியாக விளங்கிட வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய தொலைநோக்கு சிந்தனையில் பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும். அதேவேளையில் பொதுமக்களுக்கு தங்களது வாழ்வாதாரத்தைப் பெருக்கி சமுதாயத்தில் ஏற்றம் பெற ஏதுவாக சூழ்நிலையினை உருவாக்குவதும் நமது கடமையாகும்.

குறிப்பாக விவசாயிகள் வேளாண்மைப் பணிகளில் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தங்களது வருமானத்தினை இரு மடங்காக உயர்த்திக் கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்துதல், மாணவ, மாணவியர்கள தரமான முறையில் நல்லொழுக்கத்துடன் கல்வி கற்று ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை வளர்த்து கொள்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்குதல், பொதுமக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து தன்னிறைவு என்ற நிலையினை நோக்கி இட்டுச் செல்லுதல் என்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2022-ல் புதிய இந்தியாவை உருவாக்க உறுதிமொழி எடுக்கும் இவ்வேளையில் மாநில அளவில் நமது மாவட்டமும் ஒரு புதிய முன்னேற்ற நிலையை அடைய வேண்டுமென திட்டமிட்டு ஒவ்வொருவரும் முனைப்புடன் செயல்படவேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எஸ்.எஸ்.தனபதி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.ஆ.செல்லத்துரை, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி, கால்நடைப் பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.தி.மோகன், மகளிர் திட்ட அலுவலர் திரு.ஜெயராமன் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**